 Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 10 வியாழக்கிழமை (26-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 27

# உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைக்க அரசு தீர்மானம்

## புலிகள் குழப்பலாம் என அச்சமாம்

கொழும்பு, ஆகஸ்ட் 26

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் அரசாங்கம் நடத்த விருந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் தற்போது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்தல்களை விடுதலைப் புலிகள் குழப்பலாம் என்ற அச்சத்தினாலேயே அவற்றை அரசு ஒத்திவைத்ததாக செய்தி ஏஜென்ஸிகள் கருத்து வெளியிட்டன.

இத்தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தேர்தல்களை ஒத்திவைப்பது என்று அரசு முடிவு செய்ததற்கு மற்றும் சில காரணங்களை செய்தி ஏஜென்ஸிகள் வெளியிட்டன.

அவை வருமாறு:-

★ தேர்தலை நடத்தக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இப்பகுதிகளில் இல்லை என்பதை அரசு உணர்ந்துள்ளது. பாதுகாப்புச் சாதகமாக உள்ளது என்று இராணுவம் செய்த சிபார்சை அரசு அங்கீகரிக்கவில்லை.

★ பல தமிழ்க் கட்சிகள் தேர்தலில் பங்குபற்றப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டிமலை வெற்றி விழா எழுச்சியுடன் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 26

மண்கிண்டிமலையில் மகத்தான வெற்றி ஈட்டித்தந்த இதயபூமி - 1 தாக்குதலின் வெற்றி விழா தமிழீழம் எங்கும் நேற்று உணர்ச்சி பொங்கவும் எழுச்சியுடனும் கொண்டாடப்பட்டது.

வெற்றித் திருநாள் கொண்டாட்டங்கள் குடாநாட்டிலும் பரவலாக நடைபெற்றன. யாழ். நகரப் பகுதியிலும் ஏனைய கிராமப் பிரதேசங்களிலும் அலங்கார ஊர்திகளின் பவனிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவற்றைப் பெரும் எண்ணிக்கையான மக்கள் கண்டு களித்தனர்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்புத் தாக்குதலைச் சித்திரிக்கும் ஓவியங்கள், முகாம் தகர்ப்பினால் ஜனாதிபதி அடைந்த சீற்றம், தென்பகுதி அரசியல் வாதிகளின் கொதிப்பு ஆகியவற்றைச் சித்திரிக்கும் காட்சிகளைக் கொண்ட ஊர்திகள் வீதிகளில் பவனி வந்தன.

மண்கிண்டிமலைத் தாக்குதலின் போது வீரமரணம் எய்திய பத்துப் போராளிகளின் உருவப்படங்களும் ஊர்திகளில் முக்கிய இடம்பிடித்தன.

ஊர்திகளின் பவனியை மக்கள் வீதிகளில் நின்று ஆவலுடன் பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிப்பும், மக்கள் எழுச்சியும்" என்ற வீதி நாட

(7 ஆம் பக்கம் பார்க்க)

**பூநகரிப் பாதை உடன்பாடு:**

## இலங்கையின் ஒரு பகுதியை புலிகளுக்கு வழங்கும் முயற்சி!

### அரசு, ஐ.நா. தூதரகம் ஆகியவை மீது சீறுகிறார் சிறிமா

கொழும்பு, ஆக 26

இலங்கையின் ஒரு பகுதியை விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் ஒரு முயற்சியில் அரசாங்கமும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகமும் இரகசிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பூநகரிப்பாதை தொடர்பாக அரசாங்கம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்டுள்ள உத்தேச உடன்படிக்கைகள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே திருமதி பண்டாரநாயக்கா இக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

"பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக அரசுக்கும் ஐ.நா. அகதிகள் தூதரகத்துக்கும் இடையே ஓர் உடன்பாடும்' ஐ நா. அகதிகள் தூதரகத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே இன்னொரு உடன்பாடும் கைச்சாத்திடப்பட விருப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது யாழ்குடா நாட்டுக்கு தனியான அடையாளத்தை கொடுப்பதை ஏற்றுக் கொள்வதாக அமைகின்றது. இலங்கையின் இறைமையில் இருந்து யாழ்குடாவை பிரித்தெடுப்பதை ஏற்றுக்கொள்வதாகவும் இது அமைகின்றது.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பெரு நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில்!

### 'சண்டே ஐலண்ட்' விமர்சனக் கட்டுரை

கொழும்பு, ஆக 26

மன்னார் பெருநிலப்பரப்பு கடந்த சனிக்கிழமை முதல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது கடந்த சில ஆண்டுகளாக மிகக் கஷ்டப்பட்டு அமைத்த விரிவான முன்னணி பாதுகாப்பு நிலைகளில் இருந்து இராணுவம் தனது துருப்புக்களை முற்றாக விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மன்னார் பெரு நிலப்பரப்பை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

"மன்னார் பெருநிலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில்" என்ற தலைப்பில் சண்டே ஐலண்ட் வார இதழில் தராகி எழுதிய விமர்சனக் கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

முகாம்களிலும் பங்கர்களிலும் இருந்த வாபஸான படையினர் கரையோரப்பகுதியில் உள்ள தள்ளாடி மற்றும் வங்காலை பிரதான முகாம்களில் தங்கியுள்ளனர்.

வழமைபோன்று படையினரின் வாபஸை தந்திரோபாய நடவடிக்கை என்று இராணுவத்தினர் வர்ணிக்கின்றனர்.

இப் பிராந்தியத்தில் இராணுவத்துக்கு உதவி புரிந்த "ரெலோ" ஆயுதக் குழுவினரும் கடந்த சனிக்கிழமை மன்னார்த்தீவுக்கு திரும்பி விட்டனர்.

## 550 தமிழரை படையினர் தம்முடன் கூட்டிசென்றனர்

யாழ்ப்பாணம், ஆக. 26

கடந்த சனிக்கிழமை மன்னார் பெருநிலப் பரப்பில் இருந்து வெளியேறிச் சென்ற இராணுவத்தினர் அங்கு தாம் தடுத்து வைத்திருந்த 550 தமிழர்களைப் பலவந்தமாக மன்னார்த் தீவுக்கு கொண்டு சென்றிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மதிப்பிடுகின்றன.

### கொழும்பில் சடலம்

நேற்று கொழும்பில் விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு அருகில் கருகிய நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டது.

இச்சடலம் போராளியான குமாரசாமி ரவிராஜ் என்பவருடையது என சடலத்துக்கு அருகில் காணப்பட்ட அறிவித்தலில் எழுதப்பட்டிருந்தது. (உ 6)

## கிளாலியில் புலிகளின் விசைப்படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 26

கிளாலியில் பொதுமக்களின் பாதுகாப்புக்காக புலிகளின் கண்காணிப்புப்படகுகளுடன் விசைப்படகு ஒன்றும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடற்புலிகளின் தளபதி கங்கை அமரன் (குசை) நேற்று முன்தினம் கிளாலி படகுத்துறையில் பயணிகள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் இதனைத் தெரிவித்தார்.

புலிகளின் விசைப்படகு நடுக்கடலிலும் வெளிச்சத்துடன் சேவையில் ஈடுபடும் என்றும் மக்கள் பதற்றம் அடையாமல் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் அக்கரை செல்வதற்காக கிளாலிக் கரைக்கு ஆயிரக் கணக்கானோர் வந்திருந்த போதிலும் ஒரு குறிப்பிடப்பட்ட அளவு படகுகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

ரிக்கெட் பெற்ற பலர் நேற்றைய படகுச் சேவையைப் பயன்படுத்துவதற்காக அங்கேயே தங்கி இருந்தனர். (இ-117)

### இன்றும் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஆக. 26

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமையும் வழமையான நேரத்துக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**ஜே. ஆர். கூறுகிறார்:**

## ஐ.தே.கவில் சேர்வதானால் ஐ.ஐ.தே.முவை கலையுங்கள்!

### பின்கியூவில் தனித் தனியாக வாருங்கள்

கொழும்பு, ஆக. 26

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதானால் முதலில் அவர்கள் தமது முன்னணியைக் கலைத்துவிடவேண்டும்.

—முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா "சண்டே ரைம்ஸுக்கு" அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"முன்னணியைக் கலைத்த பின்னர் அவர்கள் தனித்தனியாக ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்ளலாம். இதற்கு நான் எதிர்ப்பு அல்லன். ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையும் இதனை எதிர்க்காது என்று நம்புகின்றேன்"— என்றும் அவர் கூறி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இரு கட்சி இணைப்பை ஏற்படுத்துவதில் முரண்பாடு!

கொழும்பு, ஆக. 26

காமினி திஸநாயக்காவை மட்டுமே அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்வது என்று ஐக்கிய தேசியக் கட்சி தற்போது தீர்மானித்து இருப்பதாகவும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஏனைய அரசியல்வாதிகள் சாதாரண உறுப்பினர்களாகவே ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

காமினி திஸநாயக்காவுக்கு இந்த முடிவு திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

முக்கிய பாதுகாப்பு அமைச்சு அல்லது நிதி அமைச்சு காமினிக்கோ அல்லது வேறு எவருக்குமோ கொடுக்கப்படக்கூடாது என்று அதிகாரமிக்க ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சிலர் கூறி

[7 ஆம் பக்கம் பார்க்க]

## ஆளும் ஐ. தே.கவிலும் உட்கட்சிச் சண்டை!

ஐக்கிய தேசியக் கட்சியிலும் உட்கட்சிச் சண்டை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியில் உள்ள பல்வேறு குழுக்கள் ஆளுக்கு ஆள் சேறு வாரிப் பூசிக்கொள்ளும் பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றன.

கட்சியில் பிரேமதாஸா கோஷ்டியைச் சேர்ந்தவராக அடையாளம் காணப்பட்ட பெண் எம். பி. ஒருவரைத் தூற்றும் விதத்தில் பிரசுரம் ஒன்று வெளியாகி இருப்பதாகவும்—

பதிலடியாக இதே பாணியில் பிரசாரத்தை நடத்த பிரேமதாஸா கோஷ்டி தீர்மானித்து இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-ன)

**பிரேமா, லலித் கொலை:**

## பத்து சந்தேக நபர்களின் படங்களுடன் சுவரொட்டி

கொழும்பு, ஆக. 26

லலித் அத்துலத்முதலி, ஜனாதிபதி பிரேமதாஸா ஆகியோரின் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வருவதாகக் கூறும் பத்து விடுதலைப் புலிகளின் படங்கள் அடங்கிய சுவரொட்டிகளை பொது இடங்களில் பொலிஸார் ஒட்டியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவர்களைக் கைது செய்ய உதவுவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டைமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம்
## பூங்காவனத் திருவிழா சிறப்புமலர்
26-08-1993

# சங்ககாலப் பண்பாட்டுடன் இசைந்த கிரியைகள் நடக்கும் செல்வச்சந்நிதி

## அநீதி செய்வோருக்கு ருத்ர மூர்த்தியாவான்

வேண்டுவோர்க்கு ஈபவன், தமிழரின் காவல் தெய்வம், என்றெல்லாம் போற்றப்படும் முருகனின் தலமே ஆற்றங்கரையில் அமைந்த தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்.

சிவாகம முறையில் அன்றி, திராவிட முறையில், பிராமணர் குருக்கள் அல்லாதோரால் பூசைகள், கிரியைகள் செய்யப்படும் புனிதமான தலத்தில் முருகன் வேல் வடிவில் காட்சி தருகின்றான். அந்த வேலின் ஒளி வீச்சினுள் அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கின்ற அற்புதக் கோலத்தில் பூ மலைக் கிடையில் வீதியுலா வரும் நாட்களில் அடியவர் கூட்டம் மெய்மறந்து ஆடுவதும்; துயரங்கள் தீர்ந்து இன்ப நுகர்வை அடைவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

சந்நிதி முருகனின் ஆலயக் கிரியைகளும், பக்தர்களின் வழிபாட்டுப் பாரம்பரியங்களும் வித்தியாசமானவை.

இவை திராவிடர் பாரம்பரியத்தையும், சங்க காலப் பண்பையும் எடுத்துக் காட்டும் வழிபாட்டு முறையாகும்.

சந்நிதி முருகன் ஆலயத்தில் அமுது படைக்கும் சடங்கு சங்க இலக்கியங்களில் ஒன்றான 'பெரும் பாணாற்றுப் படையில்' வரும் 'தெய் மடையில் தேக்கிலைக்கு வைகி' என்ற அடியில் வரும் தேக்கிலையில் உணவு படைக்கும் வழக்கையொட்டி, இங்கு ஆலிலையில் அமுது படைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது இந்த அமுதூட்டும் முறையை முருகன் தானே விரும்பி இக்கோயில் ஆரம்ப கர்த்தாவாகிய மருதர் கதிர்காமக்கிடம் ஆலிலையில் வைக்கப்பட்ட 'பச்சரிசிப் பொங்கலையும் பயற்றம் கறியையும்' உண்டதாக வரலாறு கூறுகிறது. இன்றும், செல்வச் சந்நிதியில் 65 ஆலம் இலைகளில் அமுது படைக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

### தலவிருட்சத்தின் தனிச் சிறப்பு

மலைத் தெய்வமான முருகனுக்கு தேனும் தினைமாவும் விசேட நிவேதனப் பொருள்களாகப் படைக்கப்பட்டு வருகின்றன இந்த சங்ககால வழிபாட்டு முறை இன்றும் வள்ளி அம்மன் வாசலில் தேனும் தினை மாவும் குழைத்து நெய்விட்டு "மாவிளக்கு எரித்தல்" முறை சிறப்பாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது

முருகன் தல விருட்சமாக விளங்குவது, வள்ளி அம்மன் வாசலில் உள்ள நாதம்பிரான் கோயிலில் உள்ள பூவரச மரமாகும். இது ஞானி ஒருவரின் சமாதியில் இருந்து முளைத்து ஓங்கி எழுந்ததாகக் கருதப்படுகிறது. இது மிகப் பழமை வாய்ந்த விருட்சம். சில காலங்களில் இலைகள் உதிர்ந்து, பட்டமரம் போலக் காட்சி தரும்; பின் திடீரென இலைகள் நன்கு செழித்துப் பச்சைப் பசேலென்று இருக்கும். இது ஒரு அற்புத சக்தி வாய்ந்த விருட்சமாகும். இதன் மஞ்சள் பூத்து உதிர்ந்த இலையை எடுத்து வீட்டில் வைத்தால், அதனை எடுக்கும் பொழுது எதனை நினைத்தார்களோ அது நிறைவேறும் என்ற நம்பிக்கை இன்றும் இருந்து வருவதால், பெண்கள் அவற்றைப் பத்திரப்படுத்திப் பூசித்து வருகின்றனர்.

நேர்த்திக் கடன்கள் வைத்துக் காவடி எடுத்தல், தூக்குக் காவடி எடுத்தல், அன்னதானம் செய்தல், அன்னாபிசேகம் செய்வித்தல், அங்கப் பிரதட்சணை செய்தல் போன்றவை கந்தன் சந்நிதியில் தினமும் நடைபெறும் நிகழ்ச்சிகள்.

இவை எல்லாவற்றையும் விடச் சிறப்பான ஒரு அம்சம் இன்றும் நடைமுறையில் இருந்து வரும். 'பூத் தொண்டு செய்தல்', 'விளக்கெடுத்தல்' என்ற பாரம்பரியத் தொண்டுகள் ஆகும். ஆண்கள் கொடியேற்ற நாளில் இருந்து பூத் திருவிழா வரை கோயிலின் 'விசேட அறநீர்' அருந்தி தூய்மையுடன் ஆலயத்திலேயே இருந்து பூ எடுத்து, மாலை கட்டி, முருகனை அலங்கரிக்கும் பணிகளைச் செய்து வருவர்.

திருவிழாக்காலங்களில் வீதியுலா முடிந்ததும் பன்னிரு சிறுமிகள் முருகனுக்கு ஆலத்தி எடுத்து தீபாராதனை செய்யும் சடங்கு மிக உணர்ச்சி பூர்வமானது இந்தத் தொண்டர்களுடன் திருவிழாக் காலங்களில் முருகன் ஓடி விளையாடுவதும், குழந்தை வடிவில் குதூகலிப்பதும் உணர்வு பூர்வமானது.

### அநீதிக்கு ருத்ரமூர்த்தி

சந்நிதி முருகன் அடியவர் குறை தீர்ப்பவன் மட்டுமல்ல அநீதி செய்பவர்க்கு முன் அவன் ருத்திரமூர்த்தியாவான். தமிழரின் குல தெய்வமாகவும் வழிபடப்படுகிறான். அவனுடைய அற்புதங்கள், கூறும் வரலாற்றுச் சம்பவங்கள் நிறைய இங்கு உண்டு!

சந்நிதி முருகன் ஆலய தேர் எரிப்பும் அதன் பின் அவன் நிகழ்த்திய திருவிளையாடல்களும் கேட்பவர் மனங்களைப் புல்லரிக்கச் செய்துவிடும்! ஆம்! இந்தத் தேரை எரித்த சிங்கள இராணுவத்தினர் ஆறு பேரும் அடுத்த திருவிழாவிற்குள் எரிந்து சாம்பராகிய கதையும்; தேரை எரிக்க ஆணையிட்ட அமைச்சர் நிலையும் முருகன் போர்த் தெய்வமாக மட்டுமல்ல தமிழர்களின் காவல் தெய்வமாகவும் விளங்குகின்றான் என்பதையே காட்டுகிறது

வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் நடைபெற்றுவரும் 'சமயச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள்' சைவத் தமிழ் பாரம்பரியத்தை நிலை நாட்டுவதுடன் பண்டைத் தமிழர் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

வேலவனின் வெற்றியைக் கண்களினூடாக குழந்தைகளுக்கு குழந்தையாகவும், இளைஞர்க்கு குமரனாகவும் வளர்ந்தவர்க்கு வள்ளி தெய்வானை சமேதராகவும் காட்சி தரும் முருகனின் நாமம், செயல் என்றும் போற்றற்குரியது.

ந. அனந்தராஜ்



செல்வச் சந்நிதி ஆலயத்தின் எழில்மிகு தோற்றம்

## ஆசியுரைகள்

ஈழமணித் திருநாட்டின் தொன்மை மிக்க திவ்ய திருத்தலங்களில் மிகச் சிறப்பும் பெருமையும் வாய்ந்தது செல்வச்சந்நிதித் திருத்தலமாகும் இது மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய முச் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஓர் புகழ் மிக்க ஆலயமாகும். முருகப்பெருமான் வேல் ரூபத்தில் அமர்ந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கின்றார். வேண்டியவர்க்கு வேண்டிய வரத்தை நல்கி தனது திருவருட்கடாட்சத்தை தினந்தோறும் அள்ளிவழங்கும் கல்லோடைக் கந்தன்; அன்னதானக் கந்தனாகவும், காவடிக் கந்தனாகவும் காட்சி தருகின்றார், "வினை தீர்க்கும் வேலவன்". அடியவர் பொருட்டாக எழுந்தருளிவந்து காட்சி கொடுக்கும் உற்சவநாட்களை எல்லா மக்களும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்கள். அவனது திருஉலாவில் பக்தர்கள் அவன் பாதாரவிந்தத்தை பணிந்து; திருவருளைப் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ ஆசி கூறுகிறேன்.

"சந்நிதி வேலவன் சகல நலமும் தருவான்"

செ. வி. இராசேந்திரம் ஐயர் (B. A.)
பிரதம பூசகர்.

எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருளால் விக்கினங்கள் இன்றி அடியாரின் குறை தீர்க்கும் செல்வச் சந்நிதி முருகனின் வசந்தோற்சவம் இன்று நடைபெறுகிறது அன்னதானக் கந்தன், காவடிக் கந்தன், ஏழைகளின் தொண்டன், தமிழரின் காவல் தெய்வமான முருகனின் கருணையும், அருளும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வியாபிக்க வேண்டும்.

க. குகேந்திர ஐயர்,
ஆலயக்குரு.

## சந்நிதி உற்சவ மரபு

சந்நிதி உற்சவ நாட்கள் சிலவேளைகளில் பதினைந்தாகவும், சிலவேளைகளில் பதினாறு நாட்களாகவும் இடம் பெறுவது வழக்கம். இதுவும் முருக வழிபாட்டின் பாரம்பரியத்தோடு இணைந்ததாகவே இருக்கின்றது.

ஆவணி மாதத்துப் பூரணையில் வரும் உதயத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடிய வகையில், அந்த மாதத்திற்குரிய, ஆவணிப் பூரணையின் முன்வரும் அமாவாசை கழிந்து பிரதமைத் திதியின் ஆரம்பத்தில் கொடியேற்றம் நடைபெறும். இது முழுக்க முழுக்க வளர்பிறை காலத்திலேயே நடைபெறுவது ஒரு முக்கிய அம்சமாகும். இதனாலேயே சிலவேளைகளில் 16 திருவிழாக்களும், சிலவேளைகளில் 17 திருவிழாக்களும் வருகின்றன.

| | |
|---|---|
| 26-8-93 | காலை 10 மணிக்கு பூங்காவனம் |
| 30-8-93 | மாலை சப்பறத் திருவிழா |
| 31-8-93 | காலை 9 மணி தேர்த்திருவிழா |
| 1-9-93 | காலை 7 மணி தீர்த்தத் திருவிழா |
| 2-9-93 | இரவு பூந்திருவிழா |

ஏனைய காலைத் திருவிழா வழமைபோல் 8 மணிக்கு நடைபெறும். இரவுத் திருவிழா மாலை 6 மணிக்கு முடிவடையும்.


எல்லோருக்கும் சந்நிதியான் அருள் ஓங்குக

விஜிதா அரிசி ஆலை
V. R. M.
வல்லை வீதி, அச்சுவேலி

செல்வராசா அன் கோ
சந்நிதி வீதி,
அச்சுவேலி.

ரிஷி ரெக்ஸ்
யாழ் வீதி
வல்வெட்டித்துறை

வல்லை
புடைவை மாளிகை
நவீன சந்தை,
வல்வெட்டித்துறை.

ஐயப்பா
ஜவுளி மாளிகை
யாழ் வீதி,
வல்வெட்டித்துறை.

கணபதி களஞ்சியம்
நவீன சந்தை,
வல்வெட்டித்துறை

செல்வமயில் ஸ்ரோஸ்
காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

இராசையா
மருந்துக் கடை
பலாலி வீதி,
திருநெல்வேலி.
கிளை:
209, K.K S றோட்,
யாழ்ப்பாணம்.

ஞானம்ஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
18A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

எமது அன்னதானப் பணியையும் சைவப் பணியையும்
சிறப்பாக தொடர்ந்து நிறைவேற்ற
சந்நிதி முருகனின் அருளை வேண்டி நிற்கும்
சந்நிதியான் ஆச்சிரமம்

விளம்பர இல: சி/5846


## இலங்கையின் ஒரு பகுதியை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான அரசியல் விஷயங்களில் சம்பந்தப்பட, அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்துக்கு ஆணை வழங்கப்படவில்லை.

ஐ.நாவுடன் தொடர்புடைய அமைப்பும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது ஏதும் தீவிரவாத அமைப்பையோ இவ்விதமாக ஆசிர்வதிப்பது, வெட்கக் கேடான விஷயமாகும்.

இந்த உத்தேச உடன்பாடுகள் பற்றிய அனைத்து விவரங்களும் தெரியவில்லை. இந்த உத்தேச உடன்பாடு பற்றிய தஸ்தாவேஜுகள் கையெழுத்திடும்படி அரசில் உள்ள சர்வதேச விவகார ஆலோசனைச் சபை அரசுக்கு ஆலோசனை கூறியிருப்பதாகத் [illegible] வாகியுள்ளது.

எமது இறைமையைப் பாதுகாக்க வேண்டிய இராணுவமோ மற்றும் எமது மக்களோ யாழ். குடாநாட்டுக்குச் செல்வதற்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் அல்லது அதனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வேறு அமைப்புக்களிடம் இருந்து அனுமதி பெற வேண்டிய தவறான அம்சம் ஒன்று இந்த உத்தேச [illegible] மக்களுக்குத் தெரியாமல் இந்த மாதிரியான நடத்தையில் எமது சொந்த அரசாங்கம் ஐ. நாவுடன் தொடர்புடைய அமைப்பு ஒன்றுடன் ஈடுபட்டிருப்பதை நாம் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம்.

ஆகவே, ஐ நா. அகதிகள் தூதரகத்துடன் அரசு கைச்சாத்திடவுள்ள உடன்படிக்கை தொடர்பான தஸ்தாவேஜுகள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை பொதுமக்களின் பரிசீலனைக்காக முன் வைக்கும்படி அரசாங்கத்தை நாம் கோருகின்றோம்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள இத்தருணத்தில் பூநகரிப் பாதை தொடர்பான அரசின் நடவடிக்கை சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

— இவ்வாறு திருமதி பண்டார நாயக்கா தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். (உ-ள)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாட்டின் தலைவர்களுக்கே கொழும்பில் பாதுகாப்பு இல்லை!

# விடுதலைப் புலிகள் நிறைந்துள்ள கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் நடத்துவது எப்படி?

## பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் ஆச்சரியம்

நாட்டின் தலைவர்களே கொழும்பில் பாதுகாப்பாக இருக்கமுடியாத இன்றைய நிலைமையில், விடுதலைப் புலிகள் நிறைந்துள்ள கிழக்குப் பகுதியில் எதிர்வரும் அக்டோபரில் இலங்கை அரசு எப்படி உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முடியும் என்று பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

''சண்டே ஐலண்ட்'' வார இதழில் பிரபாத் சஹபந்து என்பவர் எழுதிய விமர்சனக் கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்குமாதங்களுக்கு முன்பு தான் கொழும்பு நகரில் ஜனாதிபதி பிரேமதாசா கொலைப் பட்டார். பிரேமதாசா கொலை செய்யப்பட்ட பாணியில் சில காலத்துக்கு முன்பு இந்திய மண்ணில் வைத்து ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, கூட்டுப்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ ஆகியோரும் கொழும்பு நகரில் வைத்துக் கொலலப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் 90 சதவீதமான பகுதிகளை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி விட்டோம் என்று அரசாங்கம் கூறிவந்த போதிலும்—

மட்டுநகரில் புலிகள் கிரனேப் வீச்சு

மட்டக்களப்பு மாநகரசபை கட்டடத்தை அண்மையில் பாதுகாப்புப் படையினர் மீண்டும் கைப்பற்றுவதற்கு முதல் நாள் கூட விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு நகரைச் சுற்றி வளைத்து மொய்த்து கிரனேட் குண்டுகளை அங்கும் இங்குமாக வெடிக்க வைத்தனர் என்பதும்—இட்டு நிலைவாக சுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்பதும்—

பின்னர் இலகுவாக அவர்கள் தப்பிச் சென்று விட்டார்கள் என்பதும் மட்டக்களப்பில் உள்ள இராணுவ வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விதமாகத் தாக்கிவிட்டு மறையும் உத்தியில் நம்பிக்கை வைத்துள்ள விடுதலைப்புலிகள் நகர நிர்வாகத்தைச் சீர்குலைக்க தங்களால் முடியும் என்பதை இத்தாக்குதல்கள் மூலம் நிரூபித்துள்ளனர்.

ஆகவே கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்திப் பார்க்கக் கூடிய உகந்த நிலைவரம் இருக்குமா என்பது குறித்து பாதுகாப்புப்பகுப்பாய்வாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பளிக்க முடியுமா?

தமது தலைவர்களை கொழும்பு நகரில் பாதுகாக்க முடியாத ஓர் அரசாங்கம் பாதுகாப்புப் படையினரால் தம்மையே பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒரு பிரதேசத்தில் வைத்து தேர்தல் ஆணையாளர் அலுவலக ஊழியர்களுக்கு எவ்விதம் பாதுகாப்பளிக்கப் போகின்றது என்ற கேள்வியை பாதுகாப்புப் பகுப்பாய்வாளர்கள் எழுப்பியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை (18-08-1993) வரை எதிர்காலத்தில் தேர்தல் ஒன்றுக்கு இடம் உண்டா என்பது தெரியாத நிலையில் தேர்தல் ஆணையாளர் இருந்தார்.

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவதை எதிர்க்கின்றன. மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும் தேர்தலில் போட்டியிடவுள்ளன. சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் அங்கம் வகிக்கும் பொதுஜன முன்னணியின் நிலைப்பாடு இன்னும் தெரியவில்லை.

அடிக்கடி வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளுக்குச் சென்றுவரும் துடிப்பான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஈ. பி. ஆர். எல். எப். தலைவருடன் பேசியபோது, இந்த வருட இறுதி வரை கிழக்கில் இயல்பு நிலை திரும்பும் என்பதை எதிர்பார்க்க முடியாது என்று உத்தியோகப்பற்றற்ற முறையில் ஒப்புக் கொண்டுள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் நெருக்கடி நிலை

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது என்ற அரசின் முடிவைத் தொடர்ந்து தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்ட கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளின் நிலை நெருக்கடியானதாகி விட்டது.

''தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ், முஸ்லிம் வாக்காளர்களுக்கு நாம் எதனைத் தருவோமென்றுகூறுவது?''—இந்த சிக்கலில் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் உள்ளன.

வன்செயலைக் கைவிடுவதாக அறிவித்த ஒரு தமிழ்க் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், ''தமிழர்களுக்கு ''தமிழ் ஈழம்'' பெற்றுத் தருவோம் என்று கூறக்கூடியதாகவாவது விடுதலைப் புலிகளுக்கு முடியும். வாக்காளர்களை கவர்வதற்கு எம்மால் முன்வைக்கக் கூடியதாக ஒன்றும் இல்லையே'' — என்று தெரிவித்தார்.

பேரழிவுக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கில் ஒரு தேர்தலை நடத்துவதற்கு முன்னர் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என்பதே இக்கட்சிகளின் கருத்தாகும்.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

---

### கிழக்குப் பகுதி நிலைவரம்:

## ஜனாதிபதி விஜேதுங்கா எம். பிக்களுடன் ஆராய்வு

ஜனாதிபதி விஜேதுங்கா கடந்த வாரம் கிழக்குப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து அங்குள்ள நிலைவரம் பற்றி ஆராய்ந்தார்.

பாதுகாப்பு நிலைமை, நிர்வாக மற்றும் பட்ஜட் நிதி ஒதுக்கீடு ஆகியன பற்றி அங்கு பரிசீலனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அக்டோபரில் நடத்தப்படவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றி அங்கு பேசப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-தெற்கு பிளவை இணைக்கும் விதத்திலான உருப்படியான பேச்சுக்கள் அக்கூட்டத்தில் இடம்பெறவில்லை என்று அதில் கலந்து கொண்ட எம். பிக்கள் அபிப்பிராயப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### அரசமைப்பில் திருத்தம்:

## ரணில், தொண்டா உட்பட 18 பேர் தெரிவுக் குழுவில்

கொழும்பு, ஆக. 26

அரசமைப்பில் தேவையான திருத்தங்களைச் செய்வது தொடர்பாக ஆராயவிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அமைச்சர் தொண்டமானும் இடம் பெறுகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செயல்படவிருக்கும் இக்குழுவில் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர்.

அமைச்சர்களான சிறிசேன குரே, கே. என். சொக்ஸி, எஸ். தொண்டமான், விஜயபால மெண்டிஸ், விமல் விக்ரமசிங்க, ஏ.சி. எஸ். ஹமீத், ஜோசப் பெரேரா, சந்திராரணதுங்க ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

அத்துடன் மூன்று ஸ்ரீ. சு. க. எம். பிக்களும், முஸ்லிம் காங்கிரஸ், ஐ. சோ. மு., ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எவ் மற்றும் எம். ஈ. பி ஆகிய ஐந்து கட்சிகள் சார்பில் தலா ஒரு எம். பியும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ-த)

## அடுத்த வாரம் 'றுகுணு' வரும்

யாழ்ப்பாணம், ஆக. 26

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு அவசர தேவைக்கென உரம் மற்றும் கிருமிநாசினிகளுடன் 'றுகுணு' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உரம் மற்றும் கிருமிநாசினிகளை தற்சமயம் கப்பலில் ஏற்றும் வேலைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

---

# வட-கிழக்கு போர் முனைகளில் புலிகளின் இளம் தளபதிகள்

### ஆங்கில வார இதழ் தகவல்

கொழும்பு, ஆக. 26

வடக்கு-கிழக்கு போர் முனைகளில் பல ஆண்டுகாலம் போர் அனுபவம் பெற்ற இளம் தளபதிகளை விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் நியமித்துள்ளார் என்றும்—

இப்புதிய தளபதிகள் 1992 ஜனவரியில் தாக்குதல்களை ஆரம்பித்ததில் இருந்து இராணுவம் ஆயிரத்து 250பேரை இழந்தது என்றும் 'சண்டே ஐலண்ட்' வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆனையிறவு யுத்தத்தின் பின்னரே திரு. பிரபாகரன் தமது படைத் தளபதிகளை மாற்றத் தொடங்கினார் என்றும் தமிழ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

புதிய தளபதிகளின் தலைமையில் இராணுவத்துக்கு எதிரான சில துணிகரத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியிருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் காலத்தில்தான் கட்டைக்காடு மண்கிண்டிமலை ஆகிய ராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன என்றும்—

குறைந்தது 7 கோடி ரூபா பெறுமதியான இராணுவ போர்த் தளபாடங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன என்றும் அச் செய்தி கூறுகிறது.

அரச படைகளுக்கு எதிரான யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஓர் உத்தியாகவே புதிய இராணுவத் தளபதிகளையும் புலனாய்வாளர்களையும் திரு. பிரபாகரன் நியமித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## வீதிகள் திருத்த 250 பரல் தார்

யாழ்ப்பாணம், ஆக. 26

யாழ் மாநகர சபையின் வீதி திருத்த வேலைகளுக்காக 250 பரல்கள் தார் யாழ். மாநகரசபைக்கு கப்பலில் எடுத்துவரப்படும். (இ-ந)

## மரங்கள் தறிப்பதை தடுக்க விரைவில் நடவடிக்கை

### விறகு கொண்டு செல்ல அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஆக. 26

குடாநாட்டில் மரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்காக விறகு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை ஒன்றினை விரைவில் அமுல்படுத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

குடாநாட்டுக்கான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட காலம் முதல் வன்னிப் பகுதிகளில் இருந்து விறகுகள் குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படாமையினாலும் மற்றும் மின்சாரமின்மை, எரிபொருள் விலையுயர்வு காரணமாக அதிகரித்த விறகுப் பாவனையின் அவசியப் பூர்த்தி செய்வதற்காக கட்டுப்பாடின்றி மரங்கள் அழிக்கப்படும் அதேவேளை—

வெட்டப்படும் மரங்களின் அளவில் ஒரு குறிப்பிட்ட வீதத்தைத்தானும் மீள நடுகை செய்யும் நோக்கோடு விறகு கொண்டு செல்வதற்காக போக்குவரத்து அனுமதி பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும்—

இதன் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து குறிப்பிட்ட இடங்களைத் தெரிவுசெய்து மீள் மரநடுகையினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

வாகனத்தில் விறகு கொண்டு செல்பவரிடத்தில் மாத்திரமே இந்நிதி அறவிடப்படுமெனவும், சைக்கிளில் விறகு கொண்டு செல்பவருக்கு இது பொருந்தாதெனவும் இவை தொடர்பான நடைமுறை விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அவசர ஆள் திரட்டல் ★ ஆயுத கொள்வனவு

# வடபகுதி மீது விரைவில் பெரும் தாக்குதலுக்கு முஸ்தீபு

## பாதுகாப்புத் துறை நிபுணர்கள் கருத்து

கொழும்பு, ஆக. 26 ஸ்ரீலங்கா அரசு படைகளுக்கு அவசரமாக ஆள் திரட்டல் மற்றும் ஆயுத, விமான கொள்வனவு ஆகியவற்றில் தீவிர கவனம் கொண்டு செயற்படுவதை நோக்கும்போது, வெகுவிரைவில் வடபகுதி மீது பாரிய இராணுவ தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளப் போவதையே காட்டுகின்றது என்று பாதுகாப்புத்துறை நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் அவசர இராணுவ திரட்டல் நடவடிக்கையானது யுத்த காலத்தில் மேற்கொள்ளப்படும் அவசரகால நடவடிக்கையை ஒத்திருப்பதாக இராணுவ-அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள, அரசாங்கம் பாரிய திட்டம் ஒன்றை திரட்ட, அதனை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக ஆட்பலத்தை அதிகரிக்க முயல்வதாக தமிழ் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்ததாகவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-3)


## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்

நடத்தப்படும்

## ஒன்பது மாத கால விவசாய பயிற்சி நெறி - 1993/94

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சி நெறி அளிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. விண்ணப்பதாரர் க. பொ. த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. க. பொ. த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல் பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 06 — 09 — 1993

அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு-
நிறுவனம்,
மாவட்டச் செயலகம், கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப் படிவ முறையில் தயாரித்து அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு:

1. மேற்படி பயிற்சி நெறியை கற்று முடிப்பதற்கான செலவுகளும், உணவும் இலவசம்.
2. விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 17 - 09 - 1993 காலை 9.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமூகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்படமாட்டா.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர்: ..........................................
2. நிரந்தர முகவரி: ..........................................
3. தற்போதைய முகவரி: ..........................................
4. பிறந்த திகதி: ..........................................
   வயது: ..........................................
5. கல்வித் தகைமை: ..........................................
   ..........................................
6. விவசாய அனுபவங்கள்: ..........................................
7. தந்தையின் முழுப்பெயர்: ..........................................
   தந்தையின் முகவரி: ..........................................
   தந்தையின் தொழில்: ..........................................
8. குடும்ப மாத வருமானம்: ..........................................
9. வேறு தகைமைகள்: ..........................................

மேற் கூறிய தகவல்கள் யாவும் சரியானவையெனவும், உண்மையானவையெனவும், பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து பயிற்சி முடியும் வரை தொடர்ந்து பங்குபற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

..........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி: ..........................................

(ஐ-5839)


## சிவகுமாரன் பிறந்த தினம்

உரும்பராய், ஆக. 26 தியாகி பொன் சிவகுமாரனின் 43ஆவது பிறந்ததினம் இன்று மாலை 4 மணிக்கு உரும்பராயில் அவரது நினைவாலயத்தில் நடைபெற உள்ளது.

சிவகுமாரனின் அனுதாபிகளையும், ஆதரவாளர்களையும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு நினைவாலய சபை செயலாளர் திரு. ச. ஏகாம்பரநாதன் கேட்டுள்ளார்.

(ஓ-154-70)

## இரண்டு வருட கடூழியச் சிறை

கொழும்பு, ஆக. 26 தெல்லிப்பழையைச் சேர்ந்த இளைப்பாறிய வங்கி ஊழியரான சின்னத்தம்பி தங்கராசா என்பவரிடம் 2 லட்சம் ரூபா பெற்று மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கொழும்பைச் சேர்ந்த விஜயன் ரட்ணராசாவுக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிட்டிய விதித்தார். (ஓ-5)

## ராணுவ டிரக் மோதி மரணம்

மட்டக்களப்பு, ஆக. 26 ஏறாவூர் பகுதியில் இராணுவத்தினரின் டிரக் மோதி பாதசாரி ஒருவர் கொல்லப்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். நாகமேரி என்பவரே மரணம் அடைந்தவர் ஆவார்.

இது தொடர்பாக சந்துருகொண்டான் முகாமைச் சேர்ந்த நிஸங்கலால் என்ற [illegible] (ஓ)

## வடக்கில் பொதுமக்களுக்கு பாரிய உயிரிழப்பு ஏற்படும்

### வெளிநாட்டுபிரதிநிதிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஆக 26 வடபகுதி மீது மேற்கொள்ளவிருக்கும் உத்தேச இராணுவத் தாக்குதல் நடவடிக்கையானது அப்பகுதியில் வாழும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உயிரிழக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை கொண்டிருப்பதாக கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் வெளியாகி உள்ள கட்டுரையில் மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும் சாத்தியம் மிகவும் அருகிவருகிறது போல தென்படுகிறது. அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தாமல் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு தயாராகி வருகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை எதுவும் இல்லை. பயங்கரவாத பிரச்சினையே இங்கிருக்கிறது என டி. பி. விஜேதுங்க அரசு கருதுவதால் யாழ்ப்பாணம் மீது இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு தயாராகி வருவதாக கொழும்பில் உள்ள ராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டதாகவும் அந்த ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## மணலாறு பகுதி தளபதியாக கேணல் சரத் முனசிங்க

கொழும்பு ஆக. 26 மணலாறு பிராந்தியத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன மலேசியா பயணமானார்.

இவர் மலேசியாவில் இருந்து திரும்பும்வரை கேணல் சரத் முனசிங்க மணலாறு பகுதிக்குப் பொறுப்பாக இருப்பார். இவர் முன்னர் கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளராகப் பணிபுரிந்து வந்தார்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்த பின்னர் மணலாறுப் பகுதி இராணுவ இணைப்பதிகாரியாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டார். ஆறாவது படைவணிக் கட்டளைத் தளபதியாகவும் இவர் பணிபுரிகின்றார்.

பிரிகேடியர் ஜெயவர்த்தன அடுத்த மாதம் மலேசியாவில் இருந்து நாடு திரும்புவார்.

இதனிடையில் கூட்டுப் படைகள் தளகர்த்தர் ஹமில்டன் வனசிங்கா கடந்த வெள்ளிக்கிழமை தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குப் பயணமானார். (ஓ-எ)

### கொழும்பில் பல இடங்களில்

## கைதான 140 தமிழர்கள் தொடர்ந்து காவலில்

கொழும்பில் உள்ள பல்வேறு பொலீஸ் நிலையங்களாலும் சந்தேகத்தின் பேரில் கைதான தமிழர்களில் 140 பேர் இன்னும் விடுவிக்கப் படவில்லை என்றும்—

அவர்கள் கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, மூத்துவாரம், மருதானை, மாளிகாவத்தை, கிராண்ட்பாஸ் ஆகிய பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

### ஹமில்டன் நாடு திரும்பும் வரை

## பதில் தளகர்த்தராக தளபதி சிசில் பொறுப்பேற்பு

கூட்டுப் படைகள் பதில் தளகர்த்தராக இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன பொறுப்பேற்றுள்ளார்.

மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இம்மாத இறுதியில் நாடு திரும்புவார். அதுவரை லெப். ஜெனரல் வைத்தியரத்னா, இரு பதவிகளையும் வகிப்பார். (ஓ-எ)

## மண்ணெண்ணெய் முத்திரை வழங்க துரித நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் வறுமை நிவாரண உணவு முத்திரை பெறுபவர்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம உத்தியோகத்தர்கள் உடனடியாக தமது பிரதேச செயலகங்களுக்கு சென்று தமக்குத் தேவையான மண்ணெண்ணெய் முத்திரைகளை பெற்று, வறுமை நிவாரண முத்திரைகள் வைத்திருப்பவர்களுக்கு விநியோகிக்கலாம் என்று யாழ் செயலக சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை — 44 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் முத்திரைகளை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு யாழ். செயலக சமூக சேவைகள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது. (ந-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரை உடனடியாக நிறுத்திவிட்டு

# ஐ.நா. மத்தியஸ்த உதவியுடன் பிரச்சினைக்குத் தீர்வு காண்க!

### சர்வதேச அமைப்புகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஆக. 26

இலங்கை உள்நாட்டுப் போரை உடனடியாக நிறுத்தி இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளுக்கு துரித தீர்வொன்றைக் காணுமாறும்—

இந்த முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தை நாடுமாறும் —

சுயாதீன சர்வதேச அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகளும், கல்விமான்களும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட உதவி நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த 18 ஆம் திகதியும், 19 ஆம் திகதியும் இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த கருத்தரங்கிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"இடம்பெயர்வும், ஜனநாயகமும்" என்னும் தலைப்பில் நடந்த இக்கருத்தரங்கில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம், நோர்வே அகதிகள் பேரவை, மணிலா மனித உரிமைகள் நிலையம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம், கொழும்பு, புதுடில்லி மகளிர் அமைப்புகள், பிரிட்டிஷ் அகதிகள் சபை, லண்டன் சர்வதேச அலேர்ட் அமைப்பு, யுனிசெப், ஜேர்மன் தெற்காசியப் பணியகம்—

ஐ. நா அபிவிருத்தித் திட்ட ஸ்தாபனம், கொழும்பு, பேராதனை, யாழ். பல்கலைக்கழகங்கள், உலக பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர்கள், கலாநிதிகள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் புத்திஜீவிகள் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் மத்தியஸ்தத்தை இலங்கை பயன்படுத்த வேண்டும் என்று கோரும் ஆவணத்தில் இந்தப் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டனர்.

தீவிரமடைந்து வரும் இனப்பிரச்சினை, ஆயுதப்போராட்டம் ஆகியவற்றின் விளைவாக உள்நாட்டிலேயே இடம்பெயரும் மக்களினதும், சர்வதேச அகதிகளினதும் தொகை முன்னொரு போதும் இல்லாதவாறு அதிகரித்து வருவது குறித்து கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

இத்தகைய சில பிரச்சினைகளில் ஐ. நா. ஆயுதத் தலையீடுகள் பாரபட்சமாக இருந்தமை குறித்து பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

ஐ நா. ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்தின் நீதியான மத்தியஸ்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவசியமானது என்றும் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

(ஒ-3)

# யுத்த நிறுத்தம் செய்து பேச்சு நடத்த வேண்டும்

### கல்விமான்கள் வலியுறுத்து

கொழும்பு, ஆக. 26

"இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வரும் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட சக்திகளுடன் பேசவேண்டும்"

இவ்வாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடந்த கருத்தரங்கில் சர்வதேச சுயாதீன அமைப்புகளின் பிரதிநிதிகளும், கல்விமான்களும் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கொழும்பு மன்றக் கல்லூரியில் நடந்த இக்கருத்தரங்கில் உரையாற்றிய பெரும்பாலானவர் இக்கருத்தை வலியுறுத்தினர்.

இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வரும் மனிதாபிமான பிரச்சினைகளை, விசேஷமாக உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து அல்லற்படும் லட்சக்கணக்கான அகதிகளின் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்களை கருத்தில் கொண்டே உடனடி யுத்த நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் — என்று அவர்கள் கோரியுள்ளனர்.

(ஒ-3)


# MATHS CENTRE
NELLIADY.
## A/L 94
அலகுரீதியான மீட்டல் வகுப்புகள்

| | |
|---|---|
| பௌதிகம் | திரு. ஜெயசீலன் |
| இரசாயனம் | திரு. வசீகரன்<br>திரு. சிவசோதி |
| தூயகணிதம்<br>பிரயோககணிதம் | திரு அருளானந்தம் |

ஆரம்பம்: 05 - 09 - 93 10 00 a.m.
(கி/5884)



## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
18-07-1934
●
அரட்கேசரியான் அடியில்:
06-09-1992

### அமரர் நா. இராசசிங்கம்
(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)

திதி: 26 — 08 — 1993

"குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"

மனைவி யோ. இராசசிங்கம்.

அரசகேசரி -
பிள்ளையார் கோவிலடி,
நீர்வேலி.

(2706?)



BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.
A/L 94- Aug.
★ பொருளியல் ★
பகுதி I ★ பணம் ★
பகுதி II
★ வரவு-செலவுத்திட்டம் ★
ஆசிரியர்:
திரு. உதயன்
ஆரம்பம்: 28-08-1993
சனி - 7-00 காலை
(சி/5?0?)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## பொதுச் சபைக் கூட்டம்
யாழ்.மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 27-08-93 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொது நிர்வாக சபைக்கூட்டம் 9 மணிக்கு நடைபெறும்.

பொதுச் செயலாளர்.
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

(சி 5698)



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க வளர்ச்சிக்கான
## நிதியுதவி நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

1993-08-28 ஆம் திகதி நடைபெற இருந்த "வானவில்" நிதியுதவி நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் 1993-09-04ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம். திகதி மாற்றத்தால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

சி. கனகசபாபதி,
செயலாளர்.

(27066)



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 | 15 |
| 01 | 07 |
| 1960 | 1993 |



### இராமகிருஷ்ணன் ஜீவபாலன்
(ஜீவன்)

எங்களனைவரையும் நிலையாய்ப் பிரகாரமாய்
விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வமே!
பேச்சொன்றும் பேசாமல் பிள்ளை முகம் பாராமல்
மூச்சடக்கி விட்டனையோ
வஞ்சமில்லா முகமும் கள்ளமில்லா உள்ளமும்
என்றென்றும் எம் நெஞ்சை விட்டகலா
அரை நிமிடத்தில் அனைவரையும் மறந்தனையோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
கண்ணீர் பூக் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

27 - 08 - 1993 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
தந்தை, தாயார், சகோதர, சகோதரிகள்,
மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார்,
மருமக்கள், நண்பர்களும்.

தகவல்: ந இராமகிருஷ்ணன்,
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

உடுப்பிட்டிச் சந்தி,
தொண்டமனாறு.

(6445)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சகப் பாவிப்பிற்குரிய இங்கிலாந்து தயாரிப்பான ஸிங்கிள் டெமி சிலிண்டர் மெஷின் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு இல. 553, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5818)

பன்றம் குஞ்சுகள், அடைக்குரிய பன்றம், நல்ல இன முட்டைகள் உண்டு. செல்லூட் 882 C, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தியடி), யாழ்ப்பாணம். (27065)

### மணமகன் தேவை

இந்து, வயது 36, மகம் 2ஆம் பாதம், செவ்வாய் 2 குடும்பநல உத்தியோகத்தர் (P. H. M) பெண்ணுக்கு அரச, கூட்டுத்தாபன, வியாபார முகவர் மணமகன் தேவை. வீட்டுடன் சீதனம். தொடர்பு; குமாரசாமி, டச்சு வீதி, காளி கோயிலடி, சாவகச்சேரி வடக்கு. (27049)

### மெக்கானிக் தேவை

லேய்லண்ட் டீஸல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை தொடர்பு: சிவலிங்கம் மோட்டோர்ஸ், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6446)

### தவறிவிட்டது

24-08-93 திருநெல்வேலிச் சந்தியில் ஆனந்த நடராஜாவின் 501932680V இலக்க அடையாள அட்டை. இணைக்கவ அடையாள அட்டை ஆகியவற்றுடன் கறுப்பு கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (27060)

### போட்டோ பிரதிகள்

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள் இப்போது எம்மால் செய்து கொடுக்கப்படுகின்றன. சித்திரலயா, விராமன்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5669)

### ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்தப்படும் புலமைப் பரிசில் (1994) மாணவருக்கான தொடர் பரீட்சையின் 7ஆவது பரீட்சை 28 - 8 - 93 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும், வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம், எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27064)

### ENGLISH

G. A. Q. G. C E (O/L), Spoken English புதிய பிரிவுகள் 26-8 93 வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. தொடர்பு R. சிவலிங்கம் Dip-in, Eng) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். [5686]

### CAKE ICING CLASS

Cookery, Cake Icing & Sugar Craft புதியவகுப்புக்கள் 28-8-93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Yogi Home science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (27057)

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா 6/-, நன்றாகக் காய்ந்த வேப்பம்பழக் கோது துப்புரவானது கிலோ ரூபா 2/- மில்க்வைற். [சி-5830]

### நூல் வெளியீடு

'மல்லிகைப்பந்தல்' வெளியீடான திக்கவைச் சிவனின் கவிதைச் சுயசரிதை "நான்" நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் இடம்பெறும்.


# NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்.

## 94 A/L EVENING CLASS

துரித மீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

TUESDAY

BOTANY 3·00 — 5·00 V. S. குணசீலன்

THURSDAY

ZOOLOGY 3·00 — 5·00 A. ஞானேந்திரன்

TUESDAY & THURSDAY

PHYSICS 5·00 — 6·00 S கணேசன்

PURE / APPLIED } MATHS 3·00 — 5 00 குணசிங்கம்

## DAY CLASS

CHEMISTRY 1·00 — 2·00 சண்

24-08-93 ஆரம்பமாகிவிட்டன.

(சி 5823)



# மனைப் பொருளியலும் கைத்திறனும் மகளிருக்கான டிப்ளோமா பயிற்சி நெறி

★ கேக் ஐசிங் ★ உணவு தயாரித்தல்
★ உடை தயாரித்தல் ★ கை வேலை
★ பூ வேலை

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பிரிவினர்க்கான பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9 00 மணிமுதல் பிற்பகல் 1 00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவினர்க்கான பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2 00 மணி வரை நடைபெறும்.
- இப் பயிற்சிக்கான விண்ணப்பப்படிவத்தை நேரில் வந்து பெற்று பூர்த்தி செய்யவும்.

**புதிய சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 05-09-1993**
**புதிய கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 06 09-1993**

# கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

விக்டோரியா வீதி, யாழ். நகர்.

(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(சி-5833)


உ

நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்தின் முன்னாள் பரிபாலகர்

## பிரம்மஸ்ரீ குருசாமி குருக்கள்

அவர்களின்

## 18ஆம் ஆண்டு நினைவு தினம்



இன்று காலை அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும். நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். அத்தோடு வைதடி சைவ அநாதைப் பிள்ளைகளுக்கு மதிய உணவும் வழங்கப்படும்.

— அன்னாரின் புத்திரன்.

(27063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்:

# தலையிடுவதற்கு காரணம் உண்டு

மக்களைச் சொந்த நாடுகளிலேயே இடம்பெயர வைப்பது ஒரு மனித உரிமை மீறல் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இடம்பெயர்ந்தோரின் சகல நலன்களையும் கவனிப்பது ஐ. நா ஸ்தாபனத்தின் கடமை என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் பல்கலைக்கழக சட்ட உதவி நிலையத்தின் ஏற்பாட்டின் பேரில், இலங்கை மன்றக் கல்லூரியின் ''இடம்பெயர்வும் சனநாயகமும்'' என்னும் பொருளில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கிலேயே மேற்கண்ட கருத்தைக் கல்விமான்கள் முன்வைத்தனர்.

உலக நாடுகளில் நான்கு கோடிக்கும் அதிகமான மக்கள் தமது சொந்த வீடுவாசல்களை விட்டு வெளியேறி வாழ்கிறார்கள். அவர்களில் இரண்டரைக் கோடிக்கும் மேற்பட்டோர் தமது சொந்த நாடுகளிலேயே இடம்பெயர்ந்துள்ளனர் என்ற புள்ளிவிவரங்களும் அந்தக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டன.

மனிதனின் வாழ்வுரிமைகளில் அனைத்து குடியிருப்பு உரிமையும் ஒன்றாகும். உணவு, தொழில், பேச்சு, எழுத்து நடமாடும் உரிமைகள் உட்பட்ட ஏனைய அடிப்படை உரிமைகளில் வாழ்விட உரிமையும் முக்கியத்துவம் பெறுகிறது. முதன்மை வகிக்கிறது.

இயற்கையைப் பாருங்கள். மிருகங்கள், பறவைகள் மற்றும் எறும்பு போன்ற சின்னஞ்சிறிய உயிரினங்கள் கூடத் தாம் தமக்கு விரும்பிய இடத்தில், வசதியான இடத்தில், தமது வாழ்விடத்தை அமைத்து வாழுகின்றன, கூடுகள், குகைகள், புற்றுகள் அமைத்து தமக்கும் தமது வழித்தோன்றல்களுக்கும் இருப்பிடமும் பாதுகாப்பும் தேடிக்கொள்கின்றன. அந்த வாழ்விடங்களை அழித்தோ அன்றிச் சிதைத்தோ குறிப்பிட்ட உயிரினங்களை விரட்டுவது அநீதி என்றும் பாவம் என்றும் கூறுகிறோம்.

அப்படியிருக்க, மக்கள் தமக்கு விருப்பமான, வசதியான இடங்களில், தமது தாய் தந்தையரின் ஊர்களில் அமைத்த வாழ்விடங்களில் இருந்து அவர்களை விரட்டி புலம்பெயர வைப்பது மிகப்பாரதூரமான வாழ்வுரிமை மீறலாகும். தண்டனைக்குரிய அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

தமிழீழத்தை எடுத்துக் கொண்டால், தமிழ் மக்கள் தமக்குப் பாதுகாப்பான வாழ்விடங்கள் எனக் கருதி தமது சொந்த ஊர்களில் அமைத்த வீடுகளை பாதுகாப்பற்றதாக்கி, அரசு அவர்களை வெளியேற — இடம்பெயர — வைத்திருக்கிறது; இடம்பெயர வைக்கிறது. குடியிருப்புப் பகுதிகளில் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு, பீரங்கித் தாக்கு என்று தூர இருந்தே ஸ்ரீலங்காப் படைகள் தமிழர்களைக் கொல்வதால் மக்களின் வாழ்விடங்கள் பாதுகாப்பற்றவை ஆக்கப்படுகின்றன. அவர்கள் தமது வீடுவாசல்களைவிட்டு புலம்பெயர்ந்துள்ளார்கள். இது நூற்றுக்கு நூறு வீதம் வாழ்வுரிமை மீறலும், மனித உரிமை மீறலுமாகும்.

ஸ்ரீலங்கா அரசு பெரிய அளவிலான அடிப்படை உரிமை மீறலில் ஈடுபடுகிறது என்பதற்கு, தமது சொந்தப் பிரதேசத்திலேயே இடம்பெயர்ந்த தமிழர்கள் சான்றாகிறார்கள். அடிப்படை மீறல் நடப்பது அப்பட்டமாகத் தெரிகிறது. எனவே அடிப்படை உரிமை மீறலில் ஈடுபட வேண்டாம் என்று ஐ. நா ஸ்ரீலங்கா அரசை எச்சரிக்க வேண்டும். தடுக்க அழுத்தம் கொடுக்கவேண்டும். அதற்கும் ஸ்ரீலங்கா அரசு செவிசாய்க்கவில்லையெனில், ஐ. நா. தலையிட்டு யுத்தத்தை நிறுத்தவேண்டும்.

கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது போல, ஐ நா. சபை இடம்பெயர்ந்தோரின் நலன்களைக் கவனிப்பதில் காலத்தைச் செலவழியாது, அவர்கள் தமது சொந்த வீடுகளில் வாழ்வதற்கு வசதியாக யுத்தத்தை நிறுத்துவதே அவர்களுக்கு அதிக நன்மை விளைவிக்கும். தமிழர்களின் வாழ்வுரிமையும் நிலை நாட்டப்படும்.

## வவுனியா செல்லாதோருக்கு

# இங்கு நேர்முகப் பரீட்சை

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும், தேசிய பாடசாலைகளிலும் உள்ள விஞ்ஞான கூட உதவியாளர், வாசிகசாலை உதவியாளர், காவலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் வவுனியாவில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க இயலாதுபோன விண்ணப்பதாரர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்படும்.

கல்விச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் திரு. வீரரத்தினா யாழ். அரசாங்க அதிபருக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளார். (இ)

## கொழும்பில் வைத்து

# இந்திய கிரிக்கெட் வீரர்களை கொல்ல பிரபா திட்டமாம்

கொழும்பு, ஆக. 26

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய கிரிக்கெட் வீரர்களைப் பேட்டி காண்பதற்கு, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வழங்கிய அடையாள அட்டைகளுடன் சென்ற கொழும்புப் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்திய வீரர்களுக்கு பாதுகாப்பாக இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மேற்படி அடையாள அட்டைகளை ஏற்க மறுத்து விட்டனர்.

இந்திய குழுவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அதற்கு காரணம் கூறப்பட்டது.

''இந்திய கிரிக்கெட் அணியினரைக் கொல்ல பிரபாகரன் தீர்மானித்துள்ளார். பத்திரிகையாளராக வந்து, பிரபாகரன் தமது நோக்கத்தை நிறைவேற்றக் கூடும்'' —எனப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறினார்கள் என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

எனினும் நிலைமையை விளக்கிய பின்னர் கிரிக்கெட் வீரர்களைப் பேட்டிகாண பத்திரிகையாளர் அனுமதிக்கப்பட்டனர். (உ-எ)

## மண்கிண்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம், போர்க் காவடிகள் என்பனவும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

ஆனைக்கோட்டைகோம்பயன் மணலில் அமைக்கப்பட்டுள்ள மண்கிண்டிமலைத் தாக்குதல் கண்காட்சியை நேற்று பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிட்டனர்.

### வாகன வசதி

மண்கிண்டிமலைத் தாக்குதல் கண்காட்சியைப் பார்வையிடும் மக்களின் வசதி கருதி குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-5 15)

## இரு கட்சி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைமைத்துவத்துக்கு கூறியுள்ளனர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஐ. தே. க. — ஐ. ஐ. தே. மு. இணைப்பு விஷயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு குறித்து காமினி மீது குற்றம் சுமத்துவதில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

பிந்திய அரசியல் நிலைவரம் பற்றி தமது கட்சி உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கும் முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் வைத்து காமினி விளக்கமளிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தனது செயற்குழுக் கூட்டத்தில் இணைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகள் பற்றி பரிசீலனை செய்யவிருப்பதாகவும்—

ஜ ஐ தே. மு. தலைவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வது இல்லை என்ற முடிவை ஐக்கிய தேசியக் கட்சி அறிவிக்கக்கூடிய சாத்தியம் உருவாகி இருப்பதை நிராகரிக்கமுடியாது என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## ஐ.தே.கவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்வதற்கு இயூ வரிசையில் வரவேண்டும் என்று ஆளும் கட்சியின் முன்னணி உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். நானும் தீர்மானம் எடுக்கவேண்டிய இடத்தில் இருந்திருப்பின் இந்த நிலைப்பாட்டைத்தான் நிச்சயம் எடுத்திருப்பேன். நான் கட்சி விசுவாசத்தை பலமாக ஆதரிப்பவன். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறுவது பி[illegible] நான் [illegible] லிக்குக் [illegible] என்றும் ஜே. ஆர். தெரிவித்தார். (உ-எ)

# நரோமா 31 ஆம் திகதி சேவை இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 26

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ''நரோமா'' கப்பலின் சேவை எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறமாட்டாது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர் என யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் கூறினார். (இ 3)

# குடாநாட்டில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 26

''மக்களே விழித்தெழுங்கள். மீண்டும் யுத்தமேகம் சூழ்ந்து கொண்டு வருகிறது. வான்பரப்பில் யுத்த விமானங்கள்; கடற்பரப்பில் பீரங்கிக் கப்பல்கள்; நிலப்பரப்பில் கவச வாகனங்கள்,

''இத்தனைக்கும் மத்தியில் உறங்கிக் கிடப்பதா? போராடப் புறப்படுவீர் புயலென!''

மேற்கண்ட வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன, (இ-15)

## மன்னார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு நிலை விடுதலைப் புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றை எதிர் நோக்க வேண்டிய ஆபத்தில் இருந்தது. இக்காரணத்துக்காகத் தான் படையினர் வாபஸ் பெறப்பட்டார்களா? அல்லது வட பகுதியில் வேறு எங்காவது பயன்படுத்தப் படுவதற்காக படையினர் வாபஸ் பெறப்பட்டார்களா? — என்பது தெளிவாகவில்லை.

1990 ஜூனில் இரண்டாவது ஈழம் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் மன்னார் மாவட்டத்துக்கு தரை மூலமான போக்குவரத்துத் தொடர்பு இராணுவத்துக்கு இருக்கவில்லை.

மன்னார் மாவட்டத்துக்கு இரண்டு வீதிகள் செல்கின்றன. ஒன்று மதவாச்சியில் இருந்தும் மற்றது வவுனியாவில் இருந்தும் செல்கின்றன.

இந்த இரண்டு வீதிகளும் பறையன்குளத்தில் சந்திக்கின்றன. முன்னர் அச்சந்திப்பில் இராணுவம் பிரதான முகாம் ஒன்றை பராமரித்து வந்தது.

வவுனியா - மன்னார் வீதி வவுனியா நகரில் இருந்து சில மைல்கள்— நெலுக்குளம் வரையே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. மதவாச்சி வீதியில் செட்டிக்குளத்தில் இராணுவத்தின் கடைசி முகாம் உள்ளது.

ஆகவே கடந்த சனிக்கிழமை மன்னார்க் கரையோரமாக படையினர் வாபஸ் வாங்கியதைத் தொடர்ந்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரும்பாலான பிரதேசம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

இந்த அதிர்ஷ்டத்தை விடுதலைப் புலிகள் எப்படிப் பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதைபொறுத்திருந்து [illegible] யில் [illegible] (இ-எ)

## கடந்த மாதத்தில் மட்டும்

# தப்பியோடிய அதிகாரியும் 538படையினரும் கைது

கொழும்பு, ஆக. 26

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினரில் அதிகாரி ஒருவரையும் மற்றும் 538 சிப்பாய்களையும் கடந்த மாதம் இராணுவப் பொலீஸார் கைது செய்தனர்.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்

நாட்டின் பல பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூன் 15 வரையான காலத்தில் ஆயிரத்து 491 தப்பி ஓடிய படையினர் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் 15 முதல் ஜூன் 30 வரையான காலப்பகுதியில் அதிகாரி ஒருவரும் 423படையினரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் பெரும்பாலானோர் வடக்கு-கிழக்குப் போர் முனையில் ஈடுபட்டுள்ள படைப்பிரிவுகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.தலையீட்டை இப்போது ஆதரிக்கிறது'சண்டே ரைம்ஸ்'

கொழும்பு, ஆக. 26

'முதல் முன்னுரிமை'' என்ற தலைப்பில் ''சண்டே ரைம்ஸ்'' கடந்த வார இதழில் வெளியான இரண்டாவது ஆசிரியர் தலையங்கத்திலிருந்து சில பகுதிகள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் காவலில் வைத்துள்ள 32 படையினர் விஷயத்தில், அரசாங்கம் உதவுவோர் அற்ற நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளது போல் தெரிகிறது.

வடக்கு கிழக்கு யுத்தம் பற்றிய அரசின் நிலை போன்றே, போர்க் கைதிகள் நெருக்கடியிலும் அரசாங்கத்துக்கு தெளிவான வழிகாட்டலும் நோக்கமும் இல்லாதுள்ளது.

புயலில் சிக்கித் தத்தளித்து தடுமாறும் படகு போன்ற நிலையில் தான் அரச முயற்சிகளும் உள்ளன.

தடுமாறும் படகை நிலைக்குக் கொண்டு வர நங்கூரம் இல்லை. அதை வழி நடத்த வெளிச்சம் அல்லது நோக்கு இல்லை.

இந்த நிலையில் சார்க் அமைப்பு அல்லது கொமன்வெல்த் அமைப்பு ஆகியவற்றின் ஊடாக சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெறுவது குறித்து நாம் பரிசீலிக்க வேண்டும்.

இதேவேளை—

மண்கிண்டிமலை ஜானகபுர இராணுவ முகாம் வீழ்ச்சிக்கு அரச தலைவர்கள் இராணுவத்தைக் குற்றஞ்சாட்டுகின்றார்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ அழுத்தத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எனினும்—

அரசியல் திடமின்மை மற்றும் அரசியல் தலைமைத்துவத்தின் தெளிவான வழிகாட்டுதல் இன்மை ஆகியன படையினரை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாக இராணுவத் தலைமைத்துவம் நம்புகின்றது.

அரசியல் தலைமையில் உள்ள இருவிதமான பேச்சுக்கள் காரணமாக சண்டை பிடிக்கும் உறுதியைப் படையினர் இழந்துவிட்டனர் என்று நாட்டில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் உணருகின்றனர்.

வடக்கு — கிழக்கில் உள்ள மக்களும் படையினரும் துன்பப்படும் வேளையில் செல்வம் படைத்த-அதிகாரம் கொண்ட —சிறு குழு ஒன்று களியாட்டங்களில் ஈடுபட்டிருப்பதும் படையினரின் உறுதிக் குலைவுக்குக் காரணமாகும்.

நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்களுடன் சேர்ந்து கனடாவில் இயங்கும் உலகளாவிய ஒத்துழைப்புக்கான உலக கவுன்ஸில், இலங்கை இனப்பிரச்சினைக் குத்தீர்வுகாண ஐ.நா.வின்மத்தியஸ்தத்தை நாடும் படி கோரியது. ஆனால் அரசத் தலைவர்கள் விரைந்து செயல்பட்டு, அந்த கோரிக்கையை நிராகரித்தனர். இனப்பிரச்சினை எமது உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அரசத் தலைவர்கள் கூறினார்கள்.

இந்த யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பதே இலங்கை மக்களில் பெரும்பான்மையோரின் இதய அழுகையாக உள்ளது.

இருந்தும் சில அரசியல்வாதிகளும் சில ஆயுத வியாபாரிகளும் அப்பாவி மக்களின் புதைகுழிகளின் மேல் சொந்த சாம்ராஜ்யங்களைக் கட்டி எழுப்புவதை தொடரவே விரும்புகின்றனர்.

போலிக் கௌரவம் இறுதி வீழ்ச்சிக்கே கொண்டு போய் விடும். நீதியுடனான — சமாதானத்துக்கான— அனைத்துத் தெரிவுகளையும் நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஐ- நா- நிறுவனம் இன்று மூன்றாம் உலகப் பிரமுகர் ஒருவரின் தலைமையில் செயல்படுகின்றது.

அமெரிக்கா மற்றும் மேற்கு நவன்களின் ஆதிக்கத்தில் உள்ள அமைப்பாக ஐ. நா., சக்தி வாய்ந்த வட்டாரங்களின் செல்வாக்குக்கும் இலகுவாக பணியக்கூடிய நிலையில் உள்ளது. இருந்தும் கம்போடியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் ஐ. நா. நன்றாக செயல்பட்டுள்ளது.

ஐ.நாவின் சமாதான முயற்சிக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதால் இலங்கை ஒன்றையும் இழந்துவிடப் போவதில்லை என்று நாம் நம்புகின்றோம்.

எமது தரப்பு வாதத்தை நல்லமுறையில் வைக்க நாம் படிக்கவேண்டும்.

— இவ்வாறு அந்த ஆசிரிய தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. (உ எ)

## உள்ளூராட்சி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்துள்ளன;

★ தேர்தல் நடத்தவுள்ள பகுதிகளில் ''ரெலோ'', ''புளொட்'' குழுவினர் ஆயுதங்களுடன் நடமாடும் போது அங்கு தேர்தல்களை சுயாதீனமானவையாக நடத்த முடியாது எனத் தெரிவித்து வவுனியாவைச் சேர்ந்தவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான திருமதி ராஜமனோகரி புலேந்திரன், திருகோணமலை மாவட்ட எம். பியும் ராஜாங்க அமைச்சருமான எம். ஈ. எச். மஹ்ரூப் ஆகியோர் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்கு நேரடியாகக் கடிதம் எழுதியுள்ளனர்.

★ கிழக்கில் இடம்பெயர்ந்தோர் அனைவரும் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறும் வரை அங்கு தேர்தல்களை நடத்தக் கூடாது என தாமும் மற்றும் குறிப்பிட்ட மாவட்டங்களின் எம். பிக்களும் அரசைக் கோரியதாக அமைச்சர் தயாரத்ன தெரிவித்துள்ளார்.

### பரிச்சயம் இல்லை

இதற்கிடையில்—

புதிதாகப் பதவியேற்றுள்ள உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்றுப் பிற்பகல் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில்—

தமிழ்க் கட்சிகள் தேர்தலை ஒத்திவைக்கும்படி கோரியுள்ள போதிலும், எக்காரணம் கொண்டும் தேர்தல் தள்ளிப் போடப்படமாட்டாது என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் அதற்கிடையில் நேற்று மாலை தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இதிலிருந்து வடக்கு—கிழக்கில் நிலவும் நிலைமை குறித்து புதிய அமைச்சருக்குப் போதிய பரிச்சயமில்லை என்பது தெரிவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ.6)

# சொக்ஸி கருத்து

கொழும்பு, ஆக, 26

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது அரசமைப்புக்கு முரணானதாகும்.

அரசமைப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸி இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும்

ஈழத்தின் தலைசிறந்த இசைக்குழுக்களான
**S. G. சாந்தன், ராஜன்ஸ்**
இணைந்து வழங்கும்

**காற்றினிலே வரும் கீதம்**
(இசைப்பாடல் விருந்து)

இடம்:- சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்:- 28—08—1993 இரவு 8 மணி

**அன்பளிப்பு:- ரூபா 100/-, 50/-, 20/-**

அனைவரும் வருக! இசைமழையில் நனைக!!

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தமிழீழம்

(சி/5845)



**ஈவ்லின் இரட்ணம்**
**பல்வினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்**
**இன்றைய ஆய்வுத் தொடர்**

தலைமை:- பி. டால். மனுவற்பிள்ளை,
ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆய்வாளர்:- பேராசிரியர். வ. ஆறுமுகம்
தலைவர், கல்வியியற்புலம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஆய்வுப் பொருள்:-
"சுதந்திர இலங்கையில் கல்வியில் மொழி"

இடம்: கேட்போர் கூடம் (ஈ.இ ப.நி)
காலம்:- 26—08—1993 வியாழக்கிழமை
பிற்பகல் 3-30 மணிக்கு

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
— நிர்வாகி

(சி/6001)



**எமது புதிய வெளியீடுகள்**

1) 'ஒளி வீச்சு' (யூலை 93)
(மண்கிண்டிமலை தாக்குதல் - புத்தளம் தாக்குதலுடன் இன்னும் பல சிறப்பம்சங்கள் கொண்டது)

2) அருண்பாண்டியன் - சுமன் - பானுசந்தர் - ரோஜா
**'நட்சத்திர போராட்டம்'**
(ஒறிஜினல்)

3) ரஜனியின்
**'எஜமான்'** (ஒறிஜினல்)

**வீடியோ விமல்**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
(27070)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி முத்துப்பிள்ளை

சற்குளி சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் பாரியார் முத்துப்பிள்ளை நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாம்பிகை, திருநாவுக்கரசு (கணக்காளர் அலுவலகம், தபாற் திணைக்களம்), தம்பு ஒய்வு பெற்ற அஞ்சலதிபர்), சிவராசா (யாழ். அஞ்சலகம்), இராசதுரை (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாராவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியில் இன்று (26 08-93) மாலை 4 மணிக்கு நடைபெறும்.

தகவல்
கந்தசாமி சிவராசா
(மகன்)

சற்குளி,
சாவகச்சேரி.
(27071)

### திருமதி குணபூஷணம் தாஸ் (றஞ்சிதம்)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி குணபூஷணம் தாஸ் (றஞ்சிதம்) 24-8-93 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் இரத்தினம் தாஸ் (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், குகதாஸ் சுடி-நோர்வே), சாந்தி (யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சொரூ மதி (நோர்வே) யின் மாமியாரும், காலஞ்சென்ற கோண்டாவில் செல்லையா தம்பதிகளின் அன்பு மகளும், நாசபூஷணம், தருமலிங்கம், சதாசிவம், கனகபூஷணம் (இத்தாலி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-08-93 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தாஸ் (கணவர்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(27072)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மண்கிண்டிமலை விவகாரம்:

# ராணுவ நீதிமன்ற விசாரணை: யுத்த முயற்சிகளை பாதிக்கும்

## அதனால் அதனைக் கைவிட தலைமையகம் முடிவு?

கொழும்பு, ஆக. 26
மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள் என்று இராணுவத் தளபதி நியமித்த விசாரணை மன்றத்தினால் அடையாளம் காணப்பட்ட இராணுவ உயர் தளபதிகள் நால்வர் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்துவதில்லை என்று இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தளபதிகள் மீது இப்படியான இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்துவது யுத்த முயற்சிகளைப் பாதிக்கும் என்று இராணுவத் தலைமையகம் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக — குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகள் மண்கிண்டிமலை விவகாரத்தில் கவனயீனமாக நடந்து கொண்டது பற்றி அந்த அதிகாரிகளின் தனிப்பட்ட பைல்களில் பதிவுகள் செய்யப்படும் என்றும் — அது அவ்வதிகாரிகளுக்குக் கிடைக்க வேண்டிய எதிர்காலப் பதவி உயர்வுகளை முற்றாக நிறுத்திவிடும் என்றும் — ''சண்டே ஐலண்ட்'' வார இதழ் தெரிவிக்கிறது. (இ-எ)

### ஆலயங்களில்

வல்லை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோயில் மகோற்சவ விசேட நிகழ்ச்சியாக இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திருமதி நாச்சியார் செல்வநாயகத்தின் சமயச் சொற்பொழிவும், நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6மணிக்கு திரு. ச. விநாயகமூர்த்தியின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (க)

o o o

மயிலணி, ஆக. 26
கன்னாகம் கிழக்கு கிஷ்பூதராயர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ''பிட்டுக்கு மண்சுமந்த'' உற்சவமும்— நாளை வெள்ளி காலையில் அபிஷேகமும், நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். (இ-89-5)

# இரு குற்றச் சாட்டுகளில் தளுவத்த குற்றவாளி!

கொழும்பு, ஆக. 26
மணலாறு மண்கிண்டிமலை முகாம் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய விசாரணை மன்றத்தினால் வடபகுதி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஆர்.டி எஸ். தளுவத்தை இரு குற்றங்களுக்காக அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

ஒன்று, கவனயீனமாக நடந்து கொண்டது, நெருக்கடி காலத்தில் மணலாற்றுப் பகுதித் தளபதி பிரிகேடியர் பெரியியவகேயை விடுமுறையில் செல்ல அனுமதித்ததும்.

மற்றது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட தருணத்தில் அந்த அச்சுறுத்தலின் பாரதூரம் பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளாது இருந்ததும்

மணலாறு பகுதிக்குப் பொறுப்பான படைஅணித் தளபதியாக இருந்த பிரிகேடியர் பெரியியவகே மூன்று குற்றங்களுக்காக விசாரணை மன்றத்தினால் அடையாளம் காணப்பட்டார்.

முதலாவது — விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம் பெறும் அபாயம் ஏற்பட்டு வந்த நேரத்தில் மணலாற்றில் இருக்காது கொழும்பில் தங்கியிருந்தது.

இரண்டாவது — மணலாற்றுப் பகுதியின் பாதுகாப்பு நிலைகளை மேற்பார்வை செய்யத்தவறியது.

மூன்றாவது — இராணுவத் தலைமையகம் விடுத்த பணிப்புரைகளின்படி நடக்கத்தவறியது.

மேஜர் ஜே. ஏ. மஸ்கார என்பவர் படைஅணிப் பிரிவை மேற்பார்வை செய்யத் தவறியது மற்றும் போதுமான அளவு தயார்நிலையில் படையினரை வைக்காது இருந்தது ஆகிய குற்றங்களுக்காக அடையாளங்காணப்பட்டுள்ளார்.

ஏனைய இராணுவத்தினர் கவனயீனமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக அடையாளங் காணப்பட்டனர். (இ-எ)

### ஆகஸ்ட் ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 26
'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட ஆகஸ்ட் மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

வாழ்க்கைச் செலவுப் படியாக வழங்கப்படவிருந்த 260ரூபா இம் மாத வவுச்சரிலும் இடம்பெறவில்லை என்று செயலக அதிகாரி தெரிவித்தார்.

ரயில்வே, உள்ளூராட்சி ஒய்வூதியர் வவுச்சர்களும் நேற்று வந்து சேர்ந்தன. (இ-100-8)

### ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஆக. 26
யாழ்ப்பாணப் பகுதி மேலாக நேற்று வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்றில் இருந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்ட சிறிய அளவிலான துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன. (இ-16-152)

### விளையாட்டு நிகழ்வுகள்

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- ஆனைக்கோட்டை அறிவொளி ''ஏ'' அணி எதிர் புத்தூர் கலைமதி ''பி'' அணி

★ 4.45 மணி:- ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ'' அணி எதிர் வசாவிளான் றோயல் ''பி'' அணி

o o o

பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம், கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி;- ஜொலி போய்ஸ் எதிர் பாரதி

★ 5.00 மணி;- ஞானமுருகன் எதிர் சென். றோக்ஸ். (உ)


**BECON**
**கல்வி நிலையம்**

பேராதனை
பல்கலைக்கழகம்
**B A. 1994 April**

தமிழ் —
திரு. கணேசலிங்கம்
B.A. (Hons)

ஆரம்பம்: 28—08—1993
சனி 12 மணி

★ பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக G.A.Q புதிய [illegible] 1 மணி

(சி-5691)


## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### பரமலிங்கம் மணிவண்ணன்

மலர்வு: 05 — 05 — 1976
உதிர்வு: 27 — 07 — 1993

கண்ணா மணிவண்ணா காதலித்து நாம் வளர்த்த கருத்தமிக்க பொக்கிஷமே! குணத்தில் உயர்ந்தவனே! புன்னகையின் பொற்பமைந்த உன் இனிய வண்ண முகம் - பாபு!

பூந்தமிழின் ஓசையெல்லாம் நாடெங்கும் கேட்க தேன்பாயும் எம் காதில், உன் பாடல் ஒலிக்க தரணியில் நீயும் உயர்ந்திருப்பாய் என்றிருக்க தேவி தன் அருகிருக்கத் தேடி உனை அழைத்தாளோ! பூவே! நீ இன்றி எப்படித்தான் தேறுவோம்!

உன் பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா, சகோதரிகள்,
அம்மம்மா.

36/16, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(6447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org